வெளியீடு 3.

Why I am Not a Christian?

நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

ஆக்கியோன்:

Hon. பெட்ரண்ட் ரஸெல் **M. A., F. R. S.**

மொழிபெயர்ப்பாளர்:

தோழர் **S.** குருசாமி **B. A.**

வெளியிடுவோர்:

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட்.,

ஈரோடு,

1ஷ] **1933.** [அணா 3.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

Dravidan Pathippa
1[illegible] LONG BAZAAR, VELL

Why I am Not a Christian?

நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

by

Comrade Bertrand Russell, M.A., F.R.S

Translated by

Comrade S. Gurusamy, B. A.

THE RATIONAL BOOKS PUBLISHING
SOCIETY LTD.,
ERODE.

உண்மைவிளக்கம் பிரஸ்,
ஈரோடு.

பிரசுரிப்போர் முன்னுரை.

———)0(———

1927-ம் வருஷம் மார்ச்-மீ 6-ம் தேதியன்று லண்டன் தேசிய லோகாயத சங்கத்தின் (National Secular Society) ஆதரவின் கீழ் பாட்டர்ஸீ டவுன் ஹாலில் ஒரு கூட்டம் நடந்தது. அதுசமயம், இது போழ்து உலகில் ஜீவித்துவரும் பேராசிரியர்களில்ஒருவராகிய தோழர்பெட்ரண்ட் ரஸ்ஸல்அவர்கள் "நான் ஏன் கிறிஸ்துவனல்ல" என்ற விஷயமாக ஒரு உபன்யாசம் செய்தார்கள். இந்த உபந்யாசத்தைபலர்வேண்டுகோளின்படி லண்டன்வாட்ஸ் கம்பெனியார் சிறு புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறார்கள். இப்புத்தகம் 1931-ம் வருஷம் செப்டம்பர் மாதம் வரையில் 7 பதிப்புகள் ஆகியிருக்கிறது. மொத்தம் 24000 காப்பிகள் விலையாகியிருக்கின்றன. தமிழ் நாட்டிலுள்ள கிறிஸ்தவர்களும் பகுத்தறிவு இயக்கத் தோழர்களும் படித்துப் பயனடையுமாறு இதைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டிருக்கிறது. இதைத் தமிழில் மொழிபெயர்த்துக்கொள்ள அனுமதித்த லண்டன் பகுத்தறிவு நூற் பிரசுர கழகத்தார்க்கும் (London Rationalist Press Association Ltd) க்கும் எளிய தமிழில் மொழிபெயர்த்துக்கொடுத்த தோழர் **S.** குருசாமி B. A. அவர்கட்கும் நமது நன்றியுரித்தாகுக.

ஈரோடு,
15-11-33.

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகத்தார்.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

அவைத்தலைவர் தெரிவித்தபடியே இன்று உங்கள் முன்பு பேசவேண்டிய விஷயமானது ''நான் ஏன் கிறிஸ்தவனல்ல'' என்பதைப்பற்றியதாகும். முதலாவதாக ''கிறிஸ்தவன்'' என்ற வார்த்தைக்கு என்ன அர்த்தம் என்பதைக் கவனிப்போம். பெரும்பாலான மக்கள் இவ் வார்த்தையைப் பல அர்த்தங்கள் கொடுக்கக்கூடிய விதத்தில் தாராளமாய் உபயோகித்துக்கொண்டிருக்கிறார்கள். சிலர் ''கிறிஸ்தவ''னென்றால் நல் வாழ்க்கை வாழ முயற்சிப்பவன் என்ற அர்த்தத்தில் சொல்லுகிறார்கள். இந்த அர்த்தப்படி பார்த்தால் எல்லா மதங்களிலும் எல்லா வகுப்புகளிலும் ''கிறிஸ்தவர்கள்'' இருக்கவேண்டும். ஆனால் இது சரியான அர்த்தம் என்று எனக்குத்தோன்றவில்லை. ஏனெனில் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களெல்லாம்-அதாவது, பௌத்தர்கள், கன்பூஷ்யர்கள், முஸ்லீம்கள் முதலானவர்கள்-நல் வாழ்க்கை வாழ்வதற்கு முயற்சிக்காதவர்கள் என்பது இந்த அர்த்தத்தினால் தொனிக்கிறது. கிறிஸ்தவனென்றால் தன் இஷ்டப்படி சௌக்கிய வாழ்க்கை நடத்தமுயற்சிப்பவன் என்று நான் சொல்லவில்லை. நீ ஒரு கிறிஸ்துவன் என்று சொல்லிக் கொள்ளவேண்டுமானால் அதற்குமுந்தி ஏதோ ஒரு குறிப்பிட்ட கொள்கையில் உனக்கு கொஞ்சமாவது நம்பிக்கையிருக்கவேண்டும் என்பதே எனது அபிப்பிராயம். செய்ண்ட். அகஸ்டின், செய்ண்ட் தாமஸ்அக்வினஸ் ஆகிய இவர்கள் காலத்தில் இந்த வார்த்தைக்கு என்ன தீவிரமான அர்த்தம் இருந்ததோ அந்த அர்த்தம் இப்போது இல்லை என்பது நிச்சயம். அந்தக்காலங்களில் ஒருவன் தன்னைக் கிறிஸ்துவன் என்று சொல்லிக்கொண்டானானால்

அதற்கு என்ன அர்த்தம் என்பது தெரிந்தவிஷயமாகவே இருந்தது. அதாவது கட்டுத்திட்டமாக வகுக்கப்பட்ட மதக்கோட்பாடுகள் அத்தனையையும் அவன் ஒப்புக் கொண்டதாகவும், அக்கோட்பாடுகளின் ஒவ்வொரு வார்த்தையையும் தன்னுடைய முழுமனதோடு நம்புவதாகவும் ஏற்பட்டிருந்தது.

கிறிஸ்தவனென்றால் யார்?

ஆனால் இக்காலத்திலோ, அவ்வாறில்லை. கிறிஸ்து மதம் என்பதற்கு நாம் இன்னும் கொஞ்சம் குறிப்பில்லாத அர்த்தத்தைக் கற்பிக்கவேண்டிய நிலையிலிருக்கிறோம். தன்னை கிறிஸ்தவனென்று சொல்லிக்கொள்ளுகிற ஒவ்வொருவருக்கும் இரண்டு முக்கியமான விஷயங்கள் அவசியமானவையாகும். முதலாவது மிகப்பிடிவாதமான விஷயமாகும். அதாவது, நீ கடவுள் இருப்பதை நம்பவேண்டும்; ஜீவனின் அழியாத்தன்மையை நம்பவேண்டும். இந்த இரண்டு விஷயங்களிலும் உனக்கு நம்பிக்கை யில்லையானால், உன்னைக் கிறிஸ்தவன் என்று சொல்லிக்கொள்ளுவதற்கு யோக்கியதை கிடையாது. இனி, அதற்குமேல் போனால், அந்த வார்த்தையின்படி கிறிஸ்துவைப்பற்றி ஏதோ கொஞ்சமாவது நீ நம்பவேண்டும். ஏனெனில், முஸ்லீம்கள்கூட கடவுளிலும் ஜீவனின் அழியாத்தன்மையிலும் நம்பிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்; ஆனாலும் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ள மாட்டார்களல்லவா? நீ கிறிஸ்தவனென்றால், கிறிஸ்துவானவர், கடவுளை அல்லாவிட்டாலும், மக்கள் எல்லாரிலும் நிரம்ப நல்லவர் என்றும் எல்லாரிலும் அறிவாளி என்றுமாவது குறைந்த பட்சம் நீ நம்பியாகவேண்டும். கிறிஸ்துவைப்பற்றி நீ

இவ்வளவுகூட நம்பவில்லையென்றால் உன்னை கிறிஸ்தவன் என்று சொல்லிக்கொள்ள உனக்கு எந்தவித உரிமையும் கிடையாது. ஆனால் பூகோள நூல்களிலும் விட்டாக் கர்ஸ் அல்மனக் (Whitaker's Almanack) என்ற புத்த கத்திலும் கிறிஸ்தவனென்பதற்கு மற்றொருவிதமான அபிப்பிராயம் காணப்படுகின்றது. அதாவது உலக ஜனத்தொகையானது கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள், பௌத்தர்கள், அசேதனப்பொருள்களை வணங்குபவர் கள் (இந்துக்கள்) முதலிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டி ருப்பதாக அவைகளில் காணப்படுகின்றது. இந்த அர்த் தத்தில் வேண்டுமானால் நாமெல்லோரும் கிறிஸ்துவர்கள் என்று சொல்லிக்கொள்ளலாம். பூகோளப்புஸ்தகங்கள் நம் எல்லோரையும் சேர்த்து எண்ணியிருக்கின்றன. ஆனால் அது முற்றிலும் பூகோள சம்பந்தமான அர்த்தத் திலாகும். ஆகையால் அதை நாம் தள்ளிவிடவேண்டி யதுதான். நான் ஒரு கிறிஸ்தவனல்ல என்பதை உங்க ளுக்குச் சொல்லுவதில் இரண்டு முரணான விஷயங்களைச் சொல்லக்கடமைப்பட்டிருக்கிறேன. முதலாவது, நான் கடவுளிலும் ஜீவனின் அழியாத்தன்மையிலும் ஏன் நம்பிக்கைவைக்கவில்லை? என்பதைச் சொல்லவேண்டும். இரண்டாவதாக, கிறிஸ்து என்பவர் நல்லொழுக்கத்தில் மிகச்சிறந்தவர் என்பதை நான் ஒப்புக்கொண்டபோதி லும், மனித சமூகத்திலேயே அதிக நல்லவர் என்பதை யும் அதிகஅறிவாளிஎன்பதையும்நான் ஏன் ஒப்புக்கொள் ளவில்லை? என்பதையும் சொல்லவேண்டும்.

எனக்கு முந்தியிருந்த ஆராய்ச்சிக்காரர்களின் வெற்றிகரமான முயற்சிகள் இல்லாதிருந்தால், கிறிஸ்து மதம் என்பதற்கு இவ்வளவு தாராளமான அர்த்தம் என்

ஞல் கொடுக்கமுடியாது என்பது திண்ணம். நான் முன்னே சொன்னது மாதிரி, பண்டைநாளில் இந்தவார்த்தைக்கு மிகவும் அதிதீவிரமான அர்த்தம் இருந்தது. உதாரணமாக, நரகம் என்பதில் நம்பிக்கை வைப்பதும் இதில் சேர்ந்திருந்தது. சமீபகாலம்வரையில்கூட மீளாதநரகத்தீயில்நம்பிக்கை வைப்பதானது கிறிஸ்தவக்கொள்கைகளிலேயே ஒரு முக்கியமான கொள்கையாக இருந்து வந்தது. இந்த தேசத்தில்(England)மேற்கண்ட நரகத்தீ நம்பிக்கையானது பிரிவி கவுன்சில்(Privy Council) என்ற நியாய சபையின் தீர்ப்பிஞல்தான் ஒழிந்தது என்பதும், அந்தத் தீர்ப்பிற்கு காண்டர்பரி தலைமை பிஷப்பும் (Archbishop of Canterbury) யார்க் தலைமை பிஷப்பும் (Archbishop of York) சம்மதிக்காமலிருந்ததும் நீங்கள் அறிந்த விஷயமேயாகும். ஆஞல் இந்த தேசத்தில் நமது மதமானது பார்லிமெண்ட் சட்டத்திஞல் முடிவு கட்டப்படும் நிலைமையில் இருக்கிறபடியிஞல், தெய்வீகத் தலைவர்களின் அபிப்பிராயத்தை பிரிவி கவுன்சில் சட்டைபண்ணுமல் தன் இஷ்டப்படி முடிவுசெய்ய முடிந்தது. அந்த முடிவால், கிறிஸ்தவனுக்கு நரகம் என்பது அவசியமில்லாமலும் போய்விட்டது. எனவே, ஒரு கிறிஸ்தவன் நரகம் என்பதை நம்பியாகவேண்டும் என்று நான் கட்டாயப்படுத்தவில்லை.

கடவுள் இருக்கிருரா?

கடவுள் இருக்கிருரா என்ற விஷயத்தை ஆராய்ச்சி செய்வதானது ஒரு பெரிய முக்கியமான விஷயமாகும். இதைப்பற்றி போதுமான ஆராய்ச்சி செய்யப்புகுவேஞஞல், நிரந்தரமாக உங்களை இங்கேயே உட்காரவைத்தாலொழிய முடியாது. ஆகையால் கொஞ்சம் சுருக்கமாகச்

சொல்வதற்காக மன்னிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். கடவுள் இருக்கிறார் என்பதை பகுத்தறிவின் உதவியில்லாமலே நிரூபித்துவிடலாமென்பதைக்கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் விதியாக வைத்திருப்பதானது நீங்கள் அறிந்த விஷயமேயாகும். இது ஒரு வேடிக்கையான கொள்கையாகக்காணப்பட்டாலும் இது அவர்களுடைய கொள்கைகளில் ஒன்றாக இருக்கிறது. கத்தோலிக்கர்கள் இக்கொள்கையைப் புகுத்திக்கொள்ள வேண்டியது ஏன் என்றால் இன்னின்ன காரணங்களால் கடவுள் இல்லையென்பது ருஜுவாகிறது என்பதாக அறிவு வாதிகள் சொல்லிக்கொண்டிருந்ததினால்தான். ஆனால் வெறும் "நம்பிக்கை" காரணமாக கடவுள் இருக்கிறார் என்பதை ஒத்துக்கொள்ளலாம் என்பது அவர்களுக்குத் தெரியும். அறிவு வாதிகளுடைய காரணங்களும் வாதங்களும் மிகப்பெரிதாகவும் கஷ்டமானதாகவும் இருந்தபடியால் அவைகளை எப்படியாவது நிறுத்திவிட வேண்டுமென்பதை கத்தோலிக்கர்கள் உணர்ந்தார்கள். ஆகையால்தான் கடவுள் இருக்கிறார் என்பதை பகுத்தறிவின் உதவியில்லாமலே நிரூபிக்கலாம் என்று ஒரு விதியைப் போட்டார்கள். அதற்காக சில "காரணங்களை" அவர்கள் ஏற்படுத்தவேண்டியது அவசியமாயிற்று. அவைகள் அநேகம் உண்டு; ஆனால் நான் சிலவற்றைமாத்திரம் எடுத்துக்கொள்ளுகிறேன்.

முழுமுதற்காரணம் என்ற வாதம்.

கடவுளை நிரூபிப்பதற்குச் சொல்லப்படும் காரணங்களுள் மிகவும் சுலபமாய்ப்புரியக்கூடியதும் சாதாரணமானதுமாயிருப்பது முழுமுதற்காரணம் (First Cause) என்ற வாதமாகும். அதாவது, இவ்வுலகிலுள்ள ஒவ்

வொன்றிற்கும் ஒரு காரணம் இருக்கவேண்டும்; ஒவ்வொன்றின் காரணத்தையும்தொடர்ச்சியாக நினைத்துக் கொண்டேபோனால், முடிவில் ஒரு முதற்காரணத்திற்குக்கொண்டுவந்துவிடும்; அந்த முழுமுதற் காரணமே கடவுள் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது என்பதாகும். இந்த வாதமானது தற்காலத்தில் செல்லுபடியாகாது. ஏனெனில், முதலாவதாக, காரணம் என்பதேமுன்காலத்தில் இருந்தமாதிரி இப்போது இல்லை. தத்துவ ஞானிகளும் விஞ்ஞான சாஸ்திரிகளும் காரணம் என்பதை எவ்வளவோ தூரம் மாற்றிவிட்டார்கள்; அதற்கு முன்னிருந்த அர்த்தபுஷ்டியும் இப்போதுஇல்லை. ஆனால் இது ஒருபுறமிருக்க எதற்கும் முதற்காரணம் என்று "ஒன்று இருக்கவேண்டுமென்ற வாதமானது ஒப்புக்கொள்ளமுடியாததில் ஒன்றாகும் என்பதைக்காணுவீர்கள். நான்சிறுவனாயிருக்கும்போது, இதைப்பற்றி வெகு உருக்கமாக எனக்குள்ளேயே தர்க்கம் செய்து கொண்டிருந்து முழுமுதற் காரணம் என்ற வாதத்தை ஒப்புக்கொண்டுமிருந்தேன். ஆனால் என்னுடைய பதினெட்டாவது வயதில் ஒரு நாள் ஜான் ஸ்டுவர்ட் மில்லினுடைய (John Stuart Mill) சுயசரிதத்தைப் படித்துக்கொண்டிருந்தேன். அதில், கீழ் கண்ட வாக்கியத்தைக்கண்டேன். "என்னை யார் உண்டாக்கினது என்பதைச் சொல்லமுடியாது; ஏனெனில், அதற்குப்பதில் சொன்னால், பிறகு, கடவுளை யார் உண்டாக்கினர் என்ற கேள்வி தானாகவே பிறந்துவிடுகிறது என்று என் தகப்பனர் எனக்குச்சொல்லிக்கொடுத்தார்." இந்த சிறு வாக்கியமானது முழுமுதற்காரணம் என்ற வாதத்திலுள்ள அபத்தத்தை அப்பொழுதே எனக்கு விளக்கிவிட்டது.

ஒவ்வொன்றிற்கும் ஒரு காரணம் இருக்கவேண்டுமென்றால், கடவுளுக்கும் ஒரு காரணம் இருக்கவேண்டும். ஒரு காரணமுமே இல்லாமல் 'ஒன்று' (கடவுள்) இருக்க முடியும் என்றால், அதைப்போலவே இந்த உலகமும் ஒரு காரணமும் இன்றி இருக்கலாமல்லவா? ஆகையால், இந்த வாதம் நிற்கவில்லையே! இந்த முதற்காரணம் என்ற வாதமானது ஒரு ஹிந்துவின் வாதத்தைப்போலவே இருக்கிறது. ஹிந்து சொல்வது என்னவென்றால் பூமியானது யானையின்மேலிருப்பதாகவும், அந்த யானை ஒரு ஆமையின்மேலிருப்பதாகவும் சொல்லுகிறான். "அப்படியானால், அந்த ஆமை எதன்மேல் இருக்கிறதையா?" என்று கேட்டால், "அதுகிடக்கிறது, வேறு விஷயத்தைப்பற்றிப் பேசுவோம்" என்று சொல்லிவிடுகிறான். மேலே சொன்ன வாதம் இதைவிட எந்த விதத்திலும் சரியானதல்ல. யாதொரு காரணமும் இல்லாமல் இந்த உலகம் ஏன் ஏற்பட்டிருக்கக்கூடாது என்பதற்கு ஒரு பதிலும் சொல்லமுடியாது. அல்லது, உலகம் எப்போதுமே இருந்துகொண்டிருக்கிறது என்று சொல்வதை மறுப்பதற்கும் எவ்விதக்காரணமும் இல்லை. உலகத்திற்கு ஒரு ஆரம்பகாலம் கட்டாயம் இருந்திருக்கவேண்டும் என்று யூகிப்பதற்கு என்ன காரணமோ-அவசியமோ இருக்கிறது என்பதும் விளங்கவில்லை. எல்லாவஸ்துக்களுக்கும் ஒரு ஆரம்பகாலம் இருந்திருக்கவேண்டும் என்ற நினைப்பிற்கே காரணம் நமது சிந்தனா சக்தியின் வறட்சியாகும். ஆகையினால், முழுமுதற் காரணம் என்ற வாதத்தைப்பற்றி இன்னும் அதிக நேரம் செலவழித்து ஆராய்ச்சி செய்யவேண்டியது அவசியமில்லையென்றே கருதுகிறேன்.

இயற்கை விதி என்னும் வாதம்.

கடவுள் இருப்பதை நிரூபிப்பதற்கு சாதாரணமாய் சொல்லப்படும் மற்றொரு காரணம் இயற்கை விதி என்னும் வாதமாகும். 18-வது நூற்றாண்டு முழுதும் இந்த வாதம் சர்வசாதாரணமாய் இருந்துவந்தது. முக்கியமாக ஸர் ஐஸக்நியூட்டன் (Sir Isaac Newton) கோஷ்டியாருடைய கருத்துக்களை அடிப்படையாகக்கொண்டு மேற்கண்ட காரணம் சொல்லப்பட்டுவந்தது. ஆகர்ஷண சக்தியால் கிரகங்களெல்லாம் சூரியனைச்சுற்றி ஓடிக்கொண்டிருப்பதை அவர்கள் கண்டார்கள். அவைகள் அப்படிஒரேமாதிரி சுழன்றுக்கொண்டிருப்பதற்குக் காரணம் கடவுளானவர் அவைகளுக்கு அவ்வாறு கட்டளை இட்டிருப்பதால்தான் என்று நினைத்தார்கள். இவ்விதம் சொல்லிவிடுவதானது அவர்களுக்கு மிக சிரமமில்லாத வேலையாய்ப் போய்விட்டது. ஏனெனில் கடவுள் தலையில் பாரத்தைப்போட்டுவிட்டால் ஆகர்ஷண சக்தியைப் பற்றி மேலே ஆராய்ச்சி செய்யவேண்டிய அவசியமே இராதல்லவா? இப்பொழுது நாமோ இந்த சக்தியை ஈன்ஸ்டின் (Einstein)என்பவர் புதிதாகக்கண்டுபிடித்த விஷயத்தைக்கொண்டு ஆராய்ச்சி செய்கிறோம். இந்தப் புது விஷயம் கொஞ்சம் கரடுமுரடான விஷயமானதாலும், அதை விஸ்தரிப்பதென்றால் அதிக நேரம் பிடிக்குமானதாலும் அதைப்பற்றி எதுவும் விரிவாகச் சொல்ல நான் விரும்பவில்லை, எது எப்படியிருந்தாலும் ஒரு விஷயம் நிச்சயம். அதாவது நியூட்டன் கண்டுபிடித்தது மாதிரி நமக்குத்தெரியாத ஏதோ ஒரு இயற்கைக்காரணத்தால் இயற்கைத்தோற்றங்கள் ஒரு ஒழுங்கான முறை

யில் நடந்துகொண்டிருக்கின்றன என்பதை தற்காலத்து மக்களாகிய நீங்கள் ஒப்புக்கொள்ளமாட்டீர்கள். இயற்கை விதிகள் என்று நாம் நினைத்துக்கொண்டிருந்த பல விஷயங்களெல்லாம் உண்மையாகவே மனிதனுடைய கற்பனைகளைத்தவிர வேறில்லை என்பதை இப்போது நாம் அறிய ஆரம்பித்துவிட்டோம். நக்ஷத்திர மண்டலத்தின் கடைசி தூரத்தில்கூட ஒரு கெஜம் என்பது மூன்று அடிதான் என்பது உங்களுக்குத் தெரியும். இது ஒரு அபூர்வமான விஷயந்தான். ஆனால் இதை இயற்கையின் விதி என்று நீங்கள் சொல்வீர்களா? இதேமாதிரிதான் இயற்கைவிதி என்று நினைத்துக்கொண்டிருந்த பலவிஷயங்களுமாகும். உதாரணமாக அணுக்கள் என்ன செய்கின்றன என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள ஆரம்பித்தீர்களானால் நீங்கள் நினைத்துக்கொண்டிருந்ததைவிட எவ்வளவுதூரம் சட்டத்திற்கு அடங்காமல் இருக்கின்றன என்பதையும், நீங்கள் கண்டு பிடிக்கும் புள்ளி விவரங்களெல்லாம் ஏதோ தற்செயலாய் ஏற்படும் மாறுதல்களின் பலன் என்பதையும் அறிவீர்கள். மற்றொரு உதாரணம்: பாய்ச்சிகையை உருட்டும்போது 36-தடவைக்கு ஒருதடவைதான் "இரட்டை ஆறு" (இரண்டு ஆறு) விழும் என்று பாய்ச்சிகை சம்பந்தமான விதி ஒன்றிருக்கிறது என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். இந்த விதி அப்படியே ஒழுங்காக நடைபெறும் என்று சொல்லமுடியாது. இவ்விதிக்குமாறாக ஒவ்வொரு தடவையும் இரட்டை ஆறு விழுந்தால் பிறகு அதற்கொருவிதி இருக்கிறது என்று நினைப்போம். இயற்கை விதிகள் என்று சொல்லப்படுவதும் இதைப்போலதான். அவைகள் தற்செயலாய் நடக்கும் மாறு

தல்களின் சராசரிவைபக்கணக்கெடுத்ததே-யாகும். இதி லிருந்து இயற்கைவிதி, இயற்கைவிதி என்று சொல்லப் படுவது எவ்வளவுதூரம் சரியாயிருக்கிறதென்பதை யோசித்துப்பாருங்கள். இந்த சாஸ்திர முடிவுகளெல் லாம் தற்காலிகமாகக் கண்டுபிடிக்கப்பட்டதென்பதையும் இவைகள் எந்த நிமிஷத்திலும் மாறக்கூடியவைகள் என் பதையும் ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனால் இவையெல் லாம் ஒருபுறமிருக்க இந்த இயற்கைவிதிகளையெல்லாம் ஏற்படுத்துகிற ஒருவர் இருக்கவேண்டுமென்று சொல்வ தானது இயற்கை விதிகளுக்கும், மனித விதிகளுக்கும் உள்ள பேதத்தைஉணராதகாரணத்தால்தான் என அறிக. மனிதச்சட்டங்கள் என்பவை, ஒருவன் இன்னின்ன மாதிரி நடக்கவேண்டும், இன்னின்ன வழிகளில் நடப் பது நல்லது, இன்னின்ன வழிகளில் நடப்பது கெட்டது என்று இடப்படும் கட்டளைகளாகும். ஆனால் இயற் கைச்சட்டங்கள் என்பவைகளோ வஸ்துக்கள் என்னெ ன்னமாதிரி இயங்குகின்றன என்பதை வர்ணிப்பதாகும். சாதாரணமாக நடக்கும் நிகழ்ச்சிகளை-வெறும் வர்ண னை மாத்திரம் சொல்லுவதால், அவைகளை அவ்வாறு நிகழும்படி சொல்வதற்கு ஒருபேர்வழி இருக்கவேண்டு மென்று வாதிப்பதானது பொருந்தாததாகும். ஏனெ னில் அப்படிச்சொன்னால் ஏன் அந்தமாதிரி இயற்கை விதிகளை கடவுள் ஏற்படுத்தவேண்டும்? ஏன் வேறுமாதிரி ஏற்படுத்தக்கூடாது என்ற கேள்வி எழுகின்றதல்லவா? ஒரு காரணமுமில்லை; ஏதோ கடவுள் தன் மனோபீஷ்டப் படி சும்மா வேடிக்கையாக அவ்வாறு செய்தார் என்று சொல்லுவீர்களானால் சட்டத்திற்குக் கீழ்ப்படாத ஒன்று இருப்பதை அறிவீர்கள். ஆகையால் நீங்கள் சொல்லும்

இயற்கைவிதி என்னும் வாதம் உடைபட்டுப்போகிறது. ஆனால் சிலவைதீக மதக்காரர்கள் சொல்வதுபோல் வேறே விதிகள் ஏற்படுத்தாமல் குறிப்பிட்ட விதிகளைக் கடவுள் ஏற்படுத்தியதற்குக் காரணம் மிக நல்ல உலகத்தை சிருஷ்டி செய்யவேண்டுமென்று கடவுள் கருதியதால்தான் என்று நீங்களும் சொல்லலாம். மிகச் சரி; கடவுள் ஏற்படுத்திய இயற்கை விதிகளுக்கு ஒரு காரணம் உண்டு என்று சொன்னால், கடவுளே ஒரு சட்டத்திற்கு (விதிக்கு)க் கட்டுப்பட்டவர் என்று ஏற்படுகிறது. ஆகையினால் இயற்கைக்கும் நமக்கும் மத்தியில் தரகராக நீங்கள் கொண்டுவந்த கடவுளால் உங்களுக்கு ஒன்றும் பிரயோஜனமில்லாமல் போகிறது. ஏனெனில் கடவுளே எல்லா விதிகளையும் உண்டாக்கின கர்த்தா என்பது பிழையாகப் போகவே, அவருடைய ஆக்கினைகளுக்கும் மீறின ஒரு சட்டம் இருக்கிறதென்று ஏற்பட்டு, கடவுளால் ஒரு பலனும் இல்லாமற் போய் விடுகிறது. சுருங்கக் கூறுமிடத்து, இயற்கை விதி என்னும் இந்த வாதத்திற்கு, முன்னொரு காலத்திலிருந்த பலம் இப்போது கிடையாது என்பதில் சிறிதும் சந்தேகமேயில்லை. கடவுள் இருப்பதை நிரூபிப்பதற்குச் சொல்லப்படும் காரணங்கள் நாளுக்கு நாள் மாறிக்கொண்டேயிருக்கின்றன. நானும் அதை மறுப்பதற்கும் புதுக்காரணங்களே சொல்லுகிறேன். முதன் முதல் கடவுள் இருக்கிறார் என்பதற்கு பிழைகளே நிறைந்த சில குறிப்பிட்ட யூகமான முரட்டுக் காரணங்களைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால் தற்காலத்திலோ, புத்தி சம்மந்தமான காரணங்கள் வரவரக்குறைந்து, ஏதோ அர்த்தமற்ற தத்துவார்த்தமென்னும் காரணங்களே சொல்லப்படுகின்றன.

அமைப்புத்திட்டம் என்ற வாதம்.

இந்த ஆராய்ச்சியில் அடுத்தபடியாக அமைப்புத் திட்டம் என்ற வாதத்துக்கு வருகின்ருேம். அமைப்புத் திட்டம் என்ற வாதத்தைப்பற்றி உங்கள் எல்லோருக் கும்தெரியும். உலகத்திலுள்ள ஒவ்வொன்றும்நாம்இந்தஉலகத்தில் வாழ்வதற்கு ஏற்றதாக அமைக்கப்பட்டிருக்கிறது; இந்த உலகம் ஒரு சிறிதேனும் வேறு விதமாக அமைக்கப்பட்டிருந்தால் நாம் அதில் வாழ்வதற்கு முடியாது. இதுதான் அமைப்புத்திட்ட வாதமாகும். சில வேளைகளில் இந்த வாதம் விநோதமாக வழங்கப்படுவதுண்டு. உதாரணமாக: வேட்டைக்காரர் சுலபமாய் சுடுவதற்காக குழி முயல்களுக்கு வால் வெள்ளையாயிருக்கிறது என்று வாதிக்கப்படுகிறது. இப்படி வாதிப்பதைப் பற்றி குழி முயல்கள் என்ன நினைக்குமோ எனக்குப் புரியவில்லை. இந்த வாதம் வேடிக்கைப்பேச்சுக்கு மிகவும் ஏற்றதாயிருக்கிறது. மூக்குக்கண்ணுடி போட்டுக் கொள்வதற்காகவே மூக்கு இவ்வாறு அமைக்கப்பட்டிருக்கிறது என்று வால்ட்டைர் கூறியிருப்பது பலருக்குத் தெரிந்திருக்கலாம். இந்தக் கூற்று பதினெட்டாவது நூற்ருண்டிலே பொருத்தமில்லாத பேச்சாக தோன்றியிருக்கும். ஆனல் டார்வின் காலத்திற்குப் பிறகு உயிர்ப்பிராணிகள், அவை வசிக்கும் இடத்துக்குத் தக்கதாக உடல் அமைப்புப்பெற்றிருப்பதைப்பற்றி நமக்கு நன்ருய்த் தெரியுமாதலால் இம்மாதிரி வாதம் பொருத்தமற்றதென்று சொல்லுவதற்கில்லை. உயிர்ப் பிராணிகளுக்குஏற்றதாக இடத்தின்நிலைமைகள் அமைவதில்லை. ஆனல் உயிர்ப்பிராணிகள்தான் இடத்தின்நிலைமை

க்குத் தக்கவாறு வளருகின்றன. இதுவே அவை ஒன்றுக்கொன்று ஏற்றதாவதின் அடிப்படையான தத்துவமாகும். ஆனால் பொருத்தமான அமைப்பு என்னும் வாதத்துக்கு இது அத்தாட்சி ஆகாது.

. இதுஒருபுறமிருக்க அமைப்புத்திட்டம் என்றவாதததைக்கவனிக்கும் பொழுது சர்வ வல்லமையும் சர்வ ஞானமுமுள்ள கடவுளின் லட்சக் கணக்கான வருடங்களாக முயன்று படைத்த முதல்த்தர படைப்பு இந்தப் பூமியும் அதிலுள்ள பொருட்களும் அதன் குறைபாடுகளும் தான் என்று ஜனங்கள் நம்புவதானது மிகவும் ஆச்சரியமாகத் தோன்றுகிறதல்லவா? மெய்யாகச் சொல்லுகிறேன். நான் இதை நம்ப முடியவில்லை. உங்களுக்கு, சர்வவல்லமையும் சர்வ ஞானமும் இருந்து குற்றமற்ற ஓர் உலகத்தைப் படைப்பதற்கு லட்சக்கணக்கான வருடகாலஅவகாசமும் இருந்தால்,கியுகிளக்ஸ்கிளான் Ku Klux Klan என்ற அமெரிக்கவகுப்புத்துவேஷ கட்சியையும்,பாசிஸ்ட்இயக்கத்தையும், வின்ஸ்டன் சர்ச்சிலேயும் கொண்ட இந்தஉலகத்திலும் சிறந்ததான ஒரு உலகத்தை சிருஷ்டிக்க முடியாதென்று எண்ணுகிறீர்களா? "என்னைப்பார்! நான் எவ்வளவு சிறப்பாக படைக்கப்பட்டிருக்கிறேன் என்பதையோசித்துப்பார். ஆகையால் இந்த அண்ட பகிரண்டமும் ஒரு அமைப்புத் திட்டப்படியேதான் படைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று விளங்க வில்லையா"? என்று சில ஜனங்கள் சொல்லுகிறார்கள். உண்மையாகவே இப்படிச் சொல்லுபவர்களுடைய அபூர்வத்தன்மையைப் பற்றி எனக்கு எவ்வித ஆச்சரியமுமில்லை. ஆகையால் இந்த அமைப்புத்திட்ட வாதம் உண்மையில் கவைக்கு உதவாத வாதம் என்று நான் கருதுகிறேன்.

மேலும், விஞ்ஞான சாஸ்திரத்தின் சாதாரண விதிகளை நீங்கள் ஒப்புக்கொள்ளுகிறதானால், மனிதரும் இந்த உலகத்திலுள்ள மற்றும் பிராணிகளும் ஒரு குறிப்பிட்ட காலத்திலே அழிந்துபோகும் என்பதையும், அறிவீர்கள். ஜீவனின் வாழ்க்கையானது ஒரு தாம்பாளத்தில் திடீரென்று தோன்றும் ஒரு வெளிச்சத்தைப் போலாகும். கிரஹங்களின் மாறுதல்களில் இதுவும் ஒரு நிலைமையேயாகும். இவ்வித மாறுதல்கள் ஏற்படும்போது ஒரு குறிப்பிட்ட சீதோஷ்ண நிலைமை முதலானவைகளின் காரணத்தால் ஜீவன் உற்பத்தியாவதற்கு மூலாதாரமான ஒரு வஸ்து உண்டாகிறது. இந்த வஸ்துவும் கிரகங்களின் நிலைமையைப்போலவே மாறக்கூடியதும் அழியக்கூடியதுமாக இருக்கிறது. உதாரணமாக சந்திரனைப் பார்த்தீர்களானால், அதில் இனி பூமி எந்த மாறுதலடையக்கூடுமோ அதைப்பார்க்கலாம். அதாவது, உயிரற்ற, குளிர்ச்சியான ஒரு நிலைமையைப் பார்க்கலாம்.

ஆனால் இந்த அபிப்பிராயமானது மனோசஞ்சலத்தை உண்டாக்கக்கக்கூடியதாய் இருக்கிறது, என்று சிலர் சொல்லுகிறார்கள். இதை நம்பினால் வாழ்க்கையிலேயே எவ்வித இன்பமும் இருக்காது என்றுகூட சில வேளையில் சொல்லுவார்கள். இவைகளெல்லாம் பெரும் அபத்தமாகையால் நீங்கள் நம்பாதீர்கள். ஏனெனில் லட்சக்கணக்கான வருஷங்களுக்குப்பின் என்ன நடக்கப் போகிறது என்பதைப்பற்றி கவலைப்படுகிறவர்கள் யாருமேயில்லை. ஒருவேளை அப்படி கவலைப்படுகிறதாக நினைத்துக்கொண்டிருப்பவர்கள் எவரேனும் இருந்தாலும் அவர்கள் தங்களையே ஏமாற்றிக்கொள்ளுகிறார்கள் என்று

தான் சொல்லவேண்டும். இவர்கள் இவ்வுலக வாழ்க்கையைப்பற்றி அதிகத்தொல்லைப்படுகிறவர்கள் என்ருவது அல்லது கருத்து அஜீரணத்தினுல் கஷ்டப்படுகிறவர்கள் என்ருவதுதான் நினைக்கவேண்டியிருகிறது. ஏனெனில் உண்மையாகச்சொல்லவேண்டுமானுல், இன்னும் பல்லாயிரக்கணக்கான வருஷங்களுக்குப்பின் இந்தஉலகத்திற்கு ஏதோ ஒன்று நேர்ந்துவிடப்போகிறது என்பதை நினைத்துக்கொண்டு அதற்காக வருத்தப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் எவருமே இல்லை யென்பதை நிச்சயமாய்க் கூறலாம். ஆகையால், ஜீவனுனது இறுதியில் அழிந்து முடிந்துபோகக்கூடியது என்பதை நினைத்துக்கொள்வதானது மனதிற்கு சஞ்சலத்தைக் கொடுக்கிறதென்றே வைத்துக்கொண்டாலும், (மக்கள் சில சமயம் தங்கள் ஜீவன்களை நடத்தும் மாதிரியைப்பார்த்தால், இவ்விதம் நினைத்துக்கொள்வது எங்வளவோ சமாதானத்தைக் கொடுக்கும் என்பதே எனது அபிப்பிராயம்.) அதனுல் வாழ்க்கை துன்பகரமானதாய்ப் போய்விடும் என்று சொல்லிவிட முடியாது. அதற்கு மாருக பாக்கி விஷயங்களில் உங்களுடைய அறிவைச் செலுத்துவதற்கு இந்த எண்ணமானது சந்தர்ப்பத்தைக் கொடுக்கிறது என்றுதான் சொல்லவேண்டும்.

கடவுளை நிருபிக்க சில நீதி வாதங்கள்.

இனி, அடுத்தபடியாக நாம் கவனிக்கவேண்டியது, கடவுள் இருப்பதை நிருபிப்பதற்காக ஆஸ்திகர்களால் சொல்லப்படும் அநேக வாதங்களில் நீதி சம்பந்தமான வாதங்கள் என்ற விஷயமேயாகும். இந்த வாதமானது அறிவுநிலையின் அடிப்பாகம் என்பதே எனது கருத்து.

பண்டைக்காலத்தில் கடவுள் உண்டென்று நிரூபிக்க அறிவைப்பற்றியமூன்றுகாரணங்கள்முக்கியமாகசொல்லப்பட்டுவந்தனஎன்பதும்,அந்தமூன்றுகாரணங்களுக்கும்"இம்மானுவல்காண்ட்',(Immanuel Kant)என்பவர் தன்னுடைய "சுத்தப் பகுத்தறிவு ஆராய்ச்சி" என்ற நூலில் தக்கவாறு பதில் கூறி அவைகளை வெற்றுரைகளாக ஆக்கிவிட்டாரென்பதையும் நீங்களெல்லோரும் கேள்விப்பட்டிருக்கலாம். ஆனால் கடவுளை நிரூபிப்பதற்கு அந்தக் காரணங்கள் பிரயோஜனமில்லை என்று கண்டதும் அவர் (இம்மானுவேல் காண்ட்) மற்றொரு காரணத்தை சிருஷ்டி செய்தார். அதுதான் நீதி சம்மந்தமானவாதம் என்று சொல்லப்படுவது. அந்த வாதம் அவருக்குத்திருப்திகரமாகவே இருந்தது. அவரும் அநேக மக்களைப் போலவே, அறிவு விஷயங்களில் முற்போக்குடையவராயிருந்தாலும், நீதி, ஒழுக்கம் முதலிய விஷயங்களில் அவர் இளமைப் பருவத்தில்எதைக்கற்றுக்கொண்டாரோ அதையே பிடிவாதமாய் நம்பிக்கொண்டிருந்தார். இதிலிருந்து என்ன விளங்குகிறதென்றால், மூளை ஆராய்ச்சிக்காரர்கள் சொல்லுகிறபடி, நம்முடைய பிற்கால அனுபவப்பருவத்தைவிட இளமைப் பருவத்தில் ஏற்படும் நிகழ்ச்சிகளும் சகவாசங்களும் நம்முடைய மனதில் எவ்வளவோ பலமாக வேரூன்றிவிடுகிறது என்பதேயாகும்.

இம்மானுவேல் காண்ட் என்பவர் கற்பித்த மேலே சொன்ன நீதி வாதமானது, பல வகைகளாகச் சொல்லப்பட்டுவந்து அவை பத்தொன்பதாவது நூற்றாண்டு முழுதும் வெகு செல்வாக்காய் இருந்துகொண்டிருந்தது என்றாலும், அவ்விதமாகச் சொல்லப்பட்டுவந்த அந்த பல வகைகளில் ஒன்றுதான், கடவுள் இல்லாவிட்டால் எது

சரி? எது தப்பு? என்னும் ஞானமே இல்லாமற்போய் விடும் என்ற வாதமாகும். சரி, தப்பு, என்கின்ற இவை இரண்டிற்கும் என்ன அளவுகோலிருக்கிறது? ஏதேனும் வித்தியாசமிருக்கிறதா? இல்லையா என்பவைகள் வேறு விஷயமாதலால் அதைப்பற்றி தற்சமயம் நானிங்கு பேசப்போவதில்லை. ஆனால் நான் இப்போது கேட்பது என்னவென்றால், சரி, தப்பு என்கின்ற இரண்டிற்கும் வித்தியாசம் இருக்கிறது என்று நீங்கள்சொல்வீர்களேயானால், அந்த வித்தியாசம் கடவுள் கட்டளையினால் தானே ஏற்பட்டிருக்கவேண்டும்? அப்படியே கடவுள் கட்டளையிருந்தது என்றால், கடவுளுக்கே சரி, தப்பு என்ற இரண்டிற்கும் வித்தியாசமே இல்லை என்று ஏற்படுகிறதல்லவா? அப்படியானால் கடவுள் நல்லவர் என்ற கருத்துக்கு அர்த்தமே இல்லாமற்போகிறது. அல்லது, மதகர்த்தாக்கள் சொல்வதுபோல, கடவுள் நல்லவர் என்றே சொல்வீர்களானால், கடவுள் கட்டளை இல்லாமலே, சரி, தப்பு என்ற இரண்டிற்கும் அர்த்தம் ஏற்பட்டிருக்கிறது என்றாவது நீங்கள் சொல்லியாகவேண்டும். ஏனெனில், கடவுள் சம்பந்தம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், அவர் சிருஷ்டியில் தப்பு என்பதே இராது என்பதற்காக கடவுளுடைய கட்டளைகளெல்லாம் சரியானவைகளே என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். அப்படி நீங்கள் சொல்வீர்களேயானால், கடவுள் வழியாகவே சரி, தப்பு ஆகிய இரண்டும் தோன்றின என்பதை ஒத்துக்கொள்ள வேண்டியதோடு, இவை இரண்டும் கடவுளுடைய குஞ்திசயங்களுக்கு தக்கமுறைப்படி முரண்பட்டதாய் இருக்கின்றன என்பதையும் ஒத்துக்கொள்ளவேண்டும். அல்லது உங்களுக்கு மற்றொரு வசதி இருக்கிறது. ' அதாவது, சில

ஆஸ்திகர்கள் சொல்லிக்கொள்வதுபோல், இந்த உலகத்தை சிருஷ்டித்த கடவுளுக்கு மேலாக ஒரு கடவுள் உண்டென்றும், அவருடைய உத்தரவுப்படியே இந்தக் கடவுள் சிருஷ்டித்தார் என்றும்சொல்லிக்கொண்டால்ஏதோ கொஞ்சம் பொருத்தமாகவே தோன்றுகிறது. இன்னும் விளக்கமாய்ச் சொல்லவேண்டுமானல், கடவுள் பார்த்துக்கொண்டிருக்காத சமயம் பார்த்து பிசாசானது இந்த உலகத்தை சிருஷ்டிசெய்துவிட்டது என்று இந்த ஆஸ்திகர்கள் சொல்லிக்கொள்ளுகிருர்கள். இதைக்கூட ஆட்சேபிக்கமுடியும். ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் வேண்டாமென்று நினைத்து விடுகின்றேன்.

அக்கிரமங்களைப் பரிகரிக்கும் விவாதம்.

ஒழுக்கம் சம்பந்தமான மற்ருெரு வேடிக்கையான விவாதம் இருக்கின்றது. அதுதான், உலகத்தில் நியாயத்தை நிலைநாட்ட வேண்டுமானல் கடவுள் ஒருவர் இருந்தாகவேண்டும் என்பதேயாகும். இந்த உலகில் நமக்குத் தெரிந்தவரையில் நியாயம் என்பதே எங்குமே கிடையாது. நல்லவர்கள் கஷ்டப்படுகிருர்கள். கெட்டவர்கள் சுகமனுபவிக்கிருர்கள். இந்த இரண்டிலும் எது மனதிற்கு ரொம்பக் கஷ்டமாயிருக்கிறது என்றுகூட சொல்ல முடியவில்லை. இந்த உலகத்தில் எங்கு பார்த்தாலும் நியாயம் நிலவவேண்டுமானல், இந்த உலக வாழ்க்கையில் விட்டுப்போன பாக்கிநாளை சரிபண்ணுவதற்காக மற்ருெரு பிறப்பு எடுத்தாகவேண்டும் என்பதை நம்பவேண்டியிருக்கிறது. அதற்காகத்தான் கடவுள் ஒருவர் இருக்கவேண்டும் என்றும், எப்போதாவது நியாயம் கிடைக்கும் என்பதற்காக மோட்சமும் நரகமும் இருக்கவேண்டு

மென்றும் ஆஸ்திகர்கள் சொல்லுகிறார்கள். இந்த தர்க்கமானது எவ்வளவு விநோதமாயிருக்கிறது பாருங்கள்! விஞ்ஞான முறைப்படி பார்த்தால் இவ்விஷயத்தைப்பற்றி நீங்கள் என்ன சொல்வீர்கள்? "என்னமோ, எனக்கு இந்த உலகத்தைத்தவிர வேறு உலகத்தைப்பற்றி ஒன்றும் தெரியாது; இவ்வுலகத்தைமாதிரியாக எடுத்துக்கொண்டால், இங்கே அக்கிரமும் அநியாயமும் நிறைந்திருக்கும்போது, மற்ற இடங்களிலும் இப்படியேதான் இருக்கும்", என்று நீங்கள் சொல்வீர்களா அல்லவா? என்பதை யோசித்துப் பாருங்கள். ஒரு ஆரஞ்சுப் பழத்தை உரிக்கிறதாக வைத்துக்கொள்ளுங்கள். அதன் மேற்பாகம் முழுதும் அழுகிக்கெட்டுப்போய் இருப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். அப்போது நீங்கள் என்ன நினைப்பீர்கள்? கெட்டுப்போயிருக்கும் சுளைகளைச் சரிப்படுத்துவதற்காக அடியிலிருக்கும் மற்றச்சுளைகள் நன்றாயிருக்கும் என்று நினைப்பீர்களா? ஒருபோதுமில்லை. இந்த ஆரஞ்சுப் பழம் முழுதுமே கெட்டுப்போய்விட்டது என்றுதானே சொல்வீர்கள்? இதேமாதிரிதான் ஒரு விஞ்ஞான சாஸ்திரியும் இவ்வுலகத்தைப்பற்றி அபிப்பிராயப்படுகிறான். அவன் என்ன சொல்கிறான்? "இந்த உலகத்தில் அளவற்ற அநியாயத்தையே காண்கிறோம்; இதிலிருந்து இவ்வுலகம் சம்பந்தப்பட்டவரையிலாவது "நியாயம்" என்பது இவ்வுலகத்தை ஆளவில்லை என்று ஏற்படுகிறது. ஆகையால் ஒழுக்கம், நீதி என்பவைகளுக்காக ஒரு கடவுள் இருக்க வேண்டும் என்று சொல்வதற்குப் பதிலாக, அநீதியும், ஒழுக்கமின்மையுமே இருப்பதால் கடவுள் என்ற ஒருவர் இருக்கமுடியாது, என்று மெய்ஞ்ஞானத்தை அறிந்த ஒருவன் சொல்லுகிறான். உண்மையாகச் சொல்லவேண்டுமா

ஞல் அறிவு சம்பந்தமான விவாதங்கள் ஒன்றும் கடவுளைப்பற்றி நம்பும்படியாக எந்த மனிதனுடைய மனதையும் மாற்றுவதேயில்லை. ஆனால் ஏன் பெரும்பான்மையான மக்கள் கடவுள் இருப்பதாக நம்புகிறார்கள் என்றால், அவர்களுடைய சிறு பிராயத்திலிருந்தே அவ்விதமாக நம்பும்படி கற்றுக்கொடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தவிர வேறில்லை. இதுவே முக்கிய காரணமாகும். இதற்கடுத்த காரணம், நாம் பத்திரமாக இருப்போம்; நம்முடைய அண்ணன் நம்மைப் பாதுகாத்துக் கொள்வான் என்ற, பயத்தினால் எழும் ஒரு விருப்பமே கடவுள் இருக்கிறார் என்று நம்மை நம்பச்செய்கிறது.

கிறிஸ்துவின் குணங்கள்.

இனி மற்றொரு முக்கியமான விஷயத்தைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் கூறவிரும்புகிறேன். அது தான் எல்லா மக்களையும்விட கிறிஸ்துவே மிக நல்லவர் என்பதும் அவரே எல்லாரையும்விட அறிவாளி என்பதுமாகும். இவ்விஷயத்தைப்பற்றி அறிவியல் வாதிகள் போதுமான ஆராய்ச்சி செய்யவில்லை யென்பதே எனது அபிப்பிராயம். இவ் விஷயம் முடிவுபெற்றதென்று என்றும் சகல மக்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் என்னால் அதை ஒப்புக்கொள்ள முடியாது. தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்களைவிட, கிறிஸ்துவால் சொல்லப்பட்ட விஷயங்கள் பலவற்றை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். கிறிஸ்துவால் சொல்லப்பட்டவைகளில் ஒன்று உங்களுக்கெல்லாம் தெரிந்ததுதான். அதாவது, “கெடுதலை எதிர்க்காதே; உனது வலது கன்னத்தில் ஒரு

வன் அறைந்தால் அவனுக்கு இடது கன்னத்தையும் திருப்பிக்காட்டு'', என்பதாகும். இந்தக்கொள்கை எந்த விதத்திலும் ஒரு புதிய கொள்கையல்ல. கிறிஸ்துவுக்கு 500 அல்லது 600 வருஷங்களுக்கு முந்தி இருந்த புத்தராலும் (Buddha), லாஒட்ஸீ (Lao-Tse) என்பவராலும் அக்காலத்திலேயேஇக்கருத்துக்கள் சொல்லப்பட்டுவிட்டன. அது போகட்டும்கிறிஸ்தவர்கள் இந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்வதே இல்லையென்பது எனக்குத்தெரியும். உதாரணமாக, இப்போது பிரதம மந்திரியாக இருப்பவர் ஒரு உண்மையான கிறிஸ்துவர் என்பதில் எனக்குச்சந்தேகங்கிடையாது. ஆனால் அதற்காக உங்களில் யாராவது போய் அவருடைய கன்னத்தில் ஒரு அறை கொடுங்கள் என்று நான் சொல்லமாட்டேன். ஏனெனில், இந்த வாக்கியத்திற்கு தத்துவார்த்தம் உண்டென்று சொல்லி விடுவார் என்பது எனக்குத்தெரியும்.

இதைவிட விசேஷமான மற்றொருவிஷயம் இருக்கிறது. ''மற்றொருவனைப்பற்றி நீ தீர்ப்புச்சொல்லாதே; ஏனெனில், உனக்குத் தீர்ப்புச்சொல்லவும் ஒருவன் இருப்பான்,'' என்று கிறிஸ்து கட்டளையிட்டிருப்பது உங்களுக்குத்தெரியும். கிறிஸ்தவ தேசங்களிலுள்ள நியாயஸ்தலங்களில் இந்தக்கொள்கைக்கு எவ்வளவு செல்வாக்கு இருக்கிறதென்பது எனக்குத்தெரியும். மிக உண்மையான கிறிஸ்துவர்களான நியாயாதிபதிகளில்பலரைஎனக்குத்தெரியும். ஆனால் அவர்களில் ஒருவராவது தாங்கள் செய்யும் தொழிலானது கிறிஸ்துவின் போதனைக்கு முரணானது என்று இஞ்சிற்றேனும் நினைத்திருப்பதாக சொல்லமுடியுமா? என்று கேட்கிறேன். கிறிஸ்து சொல்லியிருக்கும் மற்றொரு விஷயத்தை எடுத்துக்கொள்ளு

வோம். "உன்னிடம் கேட்பவனுக்கு கொடு; உன்னிடம் கடன் கேட்பவனுக்கு உதவிசெய்ய மறுக்காதே", என்று சொல்லியிருக்கிறார். இது மிக நல்ல கருத்துதான். அரசியல் விஷயமாக எதுவும் பேசக்கூடாது என்று சபைத்தலைவர் ஆரம்பத்தில் சொன்னார். ஆயினும் ஒரே ஒருவிஷயம் மாத்திரம் சொல்லாமல் இருக்கமுடியவில்லை. அதாவது, சென்ற பொதுத்தேர்தலானது எந்தப்பிரச்சினையின் மீது எழுந்தது என்பது உங்களுக்குத்தெரியும். "உன்னிடம் கடன் கேட்பவனுக்கு மறுப்பது எவ்வளவு நல்லது" என்பதை அடிப்படையாகக்கொண்டே சென்ற தேர்தல் நடந்தது. இதிலிருந்து என்ன ஏற்படுகிறது? என்றால், இந்த நாட்டிலுள்ள லிபரல் கட்சியாரும் (Liberals) கான்சர்வேட்டிவ் கட்சியாரும் (Conservatives) கிறிஸ்துவின் கொள்கைகளை ஒப்புக்கொள்ளாதவர்களே என்பது விளங்கவில்லையா? ஏனெனில், கடன் கேட்டவர்களை மறுத்தே விரட்டியடித்தார்கள் என்பதை எவரும் மறுக்கமுடியாது.

இனி, கிறிஸ்துவின் மற்றொரு கொள்கையை எடுத்துக்கொள்வோம். இதுவும் மிக நல்ல கொள்கைதான். ஆனால் இதையும் நமது கிறிஸ்தவ சகோதரர்கள் கையாளுவதில்லை. "நீ பரிபூர்ணமானவனாய் இருக்கவேண்டுமானால் உனக்குச் சொந்தமானவைகளையெல்லாம் விற்றுவது ஏழைகளுக்குக்கொடு," என்று கிறிஸ்து சொல்லியிருக்கிறார். இதை எத்தனை கிறிஸ்தவர்கள் காரியாம்சையில் செய்கிறார்கள் என்று கேட்கிறேன். மேற்கண்ட எல்லா தத்துவங்களும் நிரம்ப சிரேஷ்டமானவைகள் தான், ஆனால் அவைகளை எவ்வளவுதூரம் பின்பற்ற முடி

யும்? என்பதே எனது கேள்வி. என்னமோ, என்றால் பின்பற்ற முடியவில்லை என்பதை நான்கண்ணியமாக ஒப்புக்கொள்ளுகிறேன். நான் கிறிஸ்தவனல்ல—ஆகையால் என்னைப்பற்றிக் கவலையில்லை. ஆனால் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள் இதற்கு என்ன சொல்லமுடியும்?

கிறிஸ்துவின் போதனையிலுள்ள குறைபாடுகள்.

மேற்சொன்ன தத்துவங்கள் மிக விசேஷமானவை என்று ஒப்புக்கொண்டே இது வரையில் பேசினேன். இனி, கிறிஸ்துவால் சொல்லப்பட்ட வேறு சில விஷயங்களை எடுத்துக்கொள்வோமேயானால், கிறிஸ்துவின் அபார நல்ல குணத்தையோ அல்லது சிறந்த அறிவையோ நான் ஒப்புக்கொள்ளக்கூடாதவனாயிருக்கிறேன் ஆனால் சரித்திர சம்பந்தமான பிரச்சினையைப்பற்றி ஒன்றும் பேசப்போவதில்லை என்பதை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஏனெனில் சரித்திர சம்பந்தமாக ஆராய்ச்சி செய்வோமேயானால், கிறிஸ்து என்ற ஒருவரே இருந்தார் என்பதற்குப் போதிய அத்தாட்சி கிடையவே கிடையாது; அப்படி ஒருக்கால் இருந்திருந்தாலும், அவரைப்பற்றி நமக்கெல்லாம் ஒன்றுமே தெரியாது. ஆகையால் இவ்வளவு கஷ்டமான விஷயத்தைப்பற்றி நான் தற்சமயம் ஆராய்ச்சி செய்யப்போவதில்லை. கிறிஸ்து மத சுவிசேஷங்களில் சொல்லப்பட்டிருக்கும் கருத்துக்களை எடுத்துக்கொண்டே கிறிஸ்துவின் போதனைகளை ஆராய்வதே எனது வேலையாகும். அப்படிப்பார்க்கும்போது, அவைகள் சிலவற்றில் அதி

புத்திசாலித்தனமான விஷயங்கள் எதுவும் இருப்பதாக எவருக்கும் தோன்றுவதற்கு நியாயமே இல்லை.. முதலாவது, அவர் காலத்திலிருந்த எல்லா மக்களும் இறந்து போவதற்கு முந்தி சகல பிரதாபங்களோடும் தான் இரண்டாவது தடவை தோன்றப்போவதாக அவர் நிச்சயமாய் நம்பியிருந்தார். இதை நிரூபிப்பதற்கு அநேக வாக்கியங்கள் காணப்படுகின்றன. உதாரணமாக, ஒரு இடத்தில் சொல்லுகிறார், "மனித குமாரன் தோன்றுகிறவரையில் இஸ்ரவேலினுடைய பட்டணங்களுக்கு நீங்கள் போகக் கூடாது". மற்றொரு இடத்தில், "மனித குமாரன் அவதாரம் செய்கிறவரையில் இங்கிருக்கின்றவைகள் இறக்காமலிருக்கும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்போது ஜீவித்துக்கொண்டிருந்தவர்கள் இறந்து போவதற்கு முன்னால், தான் கட்டாயம் இரண்டாவது தடவை தோன்றப்போவதாக கிறிஸ்துவானவர் நம்பியிருந்தார் என்பதை நிரூபிக்க இதுபோன்ற பல மேற்கோள்கள் இருக்கின்றன. அவரை முதன்முதல் பின்பற்றிய பல மக்கள் அவ்வாறே நம்பியுமிருந்தார்கள். இதை அடிப்படையாக வைத்தே அவருடைய போதனைகளில் பெரும்பாலானவைகள் சொல்லப்பட்டுமிருக்கின்றன. "நாளையத்தினத்தைப்பற்றி கவலைப்படாதே" என்றும் இன்னும் இதுபோன்ற பல விஷயங்களையும் அவர் சொன்னதின் தாத்பர்யம் என்னவென்றால், தான் இரண்டாந்தடவையாக வெகு சீக்கிரம் தோன்றப்போவதாகவும், ஆகையால் அற்பமான இப்பூலோக விஷயங்களைப்பற்றி எவ்விதக்கவலையும் வேண்டியதில்லை யெனவும் அவர் பூர்ணமாய் நம்பியிருந்ததேயாகும். கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வெகு சீக்கிரத்தில் நடக்கும் என்று உண்மையாகவே நம்பிக்கொண்டி

ருந்த பல கிறிஸ்தவர்களை எனக்குத்தெரியும். கிராமத்துப் புரோகிதர் (பாதிரி) ஒருவர் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வெகு சீக்கிரம் நிகழப்போகிறது என்று சொல்லி தன்னுடைய பக்த கோடிகளை மிரட்டிக்கொண்டிருந்தது எனக்குத்தெரியும். ஆனால் அதே சமயத்தில் அவர் தன்னுடைய தோட்டத்தில் செடிகள் நட்டுக்கொண்டிருந்ததைக் கண்டு பக்த கோடிகள் கொஞ்சம் தைரியமடைந்தார்கள் என்பதும் எனக்குத்தெரியும். ஆதிகாலத்துக் கிறிஸ்துவர்கள் இரண்டாம் வருகை எந்த க்ஷணத்திலும் நிகழும் என்ற கிறிஸ்துவின் வார்த்தையை நம்பி, செடிகள் நடுவதுபோன்ற உலக விவகாரங்களில் ஈடுபடாமலிருந்தார்கள் என்பது மிகவும் உண்மையான விஷயமாகும். ஆகையால் இவ்விஷயம் சம்பந்தப்பட்டவரையில் சாதாரண மக்களைவிட கிறிஸ்து எந்த விதத்திலாவது அறிவாளியென்று சொல்லுவதற்கு இடமிருக்கிறதா? என்பதை யோசித்துப்பாருங்கள். அன்றியும், அவர் எல்லோரையும்விட பெரிய அறிவாளியென்று சொல்லுவதற்கு எவ்விதக்காரணமும் கிடையாது.

ஒழுக்கம் என்னும் பிரச்னை.

அடுத்தாற்போல் ஒழுக்க சம்பந்தமான விஷயங்களைச் சிறிது கவனிப்போம். கிறிஸ்துவின் ஒழுக்கத்தில் ஒரு மகாபெரிய குறைபாடு இருக்கிறது என்பதே எனது அபிப்பிராயம். அது என்னவெனில், அவர் "நரகம்" என்பதில் நம்பிக்கை வைத்திருந்ததுதான். உண்மையாகவே ஜீவகாருண்யமுடைய எவனும் நிரந்தரமான தண்டனை என்கிற நரகத்தை நம்புவானா? என்பது என்னால் நினைத்துப்பார்க்கவே முடியவில்லை. சுவிசேஷங்களில் சொல்லப்பட்டிருக்கும் கிறிஸ்துவானவர் நிரந்தரமான

தண்டனையை நம்பியிருக்கிறார். அவருடைய போதனைகளைக்கேட்காதவர்கள் மீது பழிக்குப்பழிவாங்கும் தத்துவத்தைக்கொண்ட கோபாக்கினியை பல இடங்களில் கொட்டியிருப்பதைக் காணலாம். மத போதகர்கள் எல்லாருக்குமே இந்தவிதமான மனப்பான்மை இருப்பது சர்வ சாதாரணமான விஷயமாகும். ஆனால், மனித சமூகத்திலேயே மிகச் சிறந்தவரென்றும், மிக மேன்மையானவரென்றும் சொல்லப்படும் ஒருவரிடம் இவ்வித மனப்பான்மை இருப்பது பொருந்துமா? உதாரணமாக, சாக்ரட்டீஸ்(Socrates) என்பவரை எடுத்துக்கொள்ளுங்கள். அவரிடம் 'இந்தமாதிரியான குணத்தைப்பார்க்கவே முடியாது. அவருடைய வார்த்தைகளைக் கேட்காதவர்களிடத்தில் அவர் எவ்வளவு சாதுத்தன்மையாகவும், அன்பாகவும், நாகரீகமாகவும் நடந்துகொண்டிருக்கிறார் என்பது உங்களுக்குத்தெரியும். மகான் என்று சொல்லப்படும் ஒருவர் கோபமான முறைகளைக் கையாளுவதை விட சாந்தமான முறைகளைக் கையாளுவதுதான் விசேஷமானது என்பதே எனது தாழ்மையான அபிப்பிராயமாகும். சாக்ரட்டீஸ் தான் இறக்குந்தருவாயில்கூட என்ன சொல்லிக்கொண்டு இறந்தார் என்பதும், தனக்கு முரண்பட்டவர்களிடத்தில் எப்படி நடந்துகொண்டார் என்பதும், உங்களுக்குத்தெரியாத விஷயமல்ல.

“ஏ! சர்ப்பங்களே! ஏ! விரியன் பாம்புக்குட்டிகளே! நீங்கள் நரகவேதனையிலிருந்து எப்படித் தப்பப்போகிறீர்கள்”, என்று கிறிஸ்துவானவர் சுவிசேஷங்களில் சொல்லியிருப்பதைப் படித்திருப்பீர்கள். இவ்விதம் சொல்லியிருப்பது யாரைப்பற்றி யென்பது தெரியுமா?

கிறிஸ்துவின் போதனைகளை ஏற்றுக்கொள்ளாதவர்களிடத்தில் சொன்ன வார்த்தைகள் என்பதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். இந்த விதமாய் அவர் சொல்லியது அவருடைய நல்ல மனப்பான்மையைக் காட்டுவதாக எனக்குத்தோன்றவில்லை. நாகத்தைப்பற்றி இதே தோரணையில் இன்னும் எவ்வளவோ விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. பரிசுத்த ஆவி (Holy Ghost) யின் சம்பந்தமான பாவத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கும் ஒரு வாக்கியம் உங்கள் எல்லோருக்கும் தெரிந்ததுதான். "எவனொருவன் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசுகிருனே, அவன் இந்த உலகிலாகட்டும், அல்லது மறு உலகிலாகட்டும்மன்னிக்கப்படவேமாட்டான்" என்பதே அவ்வாக்கியமாகும். இவ்வாக்கியமானது இவ்வுலகிலுள்ள மக்களில்பலருக்குசொல்லொணுதமனத்துயரைக்கொடுத்திருக்கிறது. ஏனெனில், தாங்கள் பரிசுத்த ஆவிக்கு விரோதமாக நடந்து பாவத்தைச் செய்து விட்டதாகக் கற்பித்துக்கொண்டு, இந்த உலகத்திலும் மறு உலகத்திலும் தாங்கள் மன்னிக்கப்படவே மாட்டர்கள் என்று நினைத்து மனம் புழுங்குகின்றவர்கள் எவ்வளவோ மக்கள் இருக்கின்றனர். கொஞ்சமாவது ஈவு, இரக்கம், காருண்யம் உடைய எந்தமனிதனும் மக்களிடத்தில் இவ்வளவு பயங்கரத்தை உண்டாக்குவானு என்று என்னுல் நினைக்கவே முடியவில்லை.

மற்றேரிடத்தில் கிறிஸ்து சொல்லியிருப்பதாவது, "மனித குமாரனனவர் தேவதூதர்களை அனுப்புவார்; கோபப்படுத்துகிறவர்களையும் அக்கிறமம் பண்ணுகிறவர்களையும் சேர்த்து எரி நெருப்பில் போடுவார்கள்; அவஸ்தையினுல் கதறுவதையும் பல்லை நெற நெற வென்றுகடிப்

பதையும் அங்கே காணலாம்.'' இதைச்சொல்லிவிட்டு கதறுங்காட்சியையும் பற்கள் கடிபடுகிற காட்சியையும்வரி சைபாகச் சொல்லிக்கொண்டே போகிறார். இதைப்படித் ததும், இந்தக் காட்சிகளைப்பற்றி நினைப்பதில் அவருக்கு எவ்வளவு உற்சாகமிருந்திருந்தால் இவ்வாறு வர்ணிப்பார் என்பது தெளிவாய்விளங்குகிறது. அப்படியில்லாவிட்டால் இவ்வளவு அடிக்கடி இதைப்பற்றி வர்ணிப்பதற்குஅவசிய மேயில்லை. மற்றொரிடத்தில் செம்மறியாட்டைப்பற்றியும் வெள்ளாட்டைப்பற்றியும்சொல்லப்பட்டிருப்பதுஉங்களுக் குத்தெரியுமென்றே நினைக்கிறேன். அதாவது, அவருடையஇரண்டாவதுதோற்றத்திற்குப்பிறகுவெள்ளாடுகளை யும்செம்மறியாடுகளையும் தனித்தனியாகப் பிரிப்பாராம். பிரித்ததும் வெள்ளாடுகளைப்பார்த்து, ''ஏ! பாவஜென் மங்களே! என்னைவிட்டுத் தொலையுங்கள்; மீளா நரகத் தில் கிடந்து வேதனைப்படுங்கள்'', என்று சொல்வா ராம். பிறகு ''இவைகளெல்லாம் மீளா நரகத்தியில் தொலைந்துபோகும்''. என்று சொல்லுகிறார். இதுதான் ஆடுகள் சம்மந்தமான விஷயம். இனி, மற்றொரு உதா ரணத்தை எடுத்துக்கொள்வோம். ''உன்னுடைய கை யானது உனக்கு ஏதாவது கோபமூட்டினால் அதை உட னே வெட்டி எறிந்துவிடு; ஏனெனில், இரண்டு கைக ளோடும் மீளா நரகத்தியில் கிடந்து அவஸ்தைப்படுவ தைவிட அங்கஈனத்தோடு உலகில் சஞ்சரிப்பதே மேலா கும்'' என்று ஒரு இடத்தில் சொல்லுகிறார். இதையே பன்னிப்பன்னி பல இடங்களில் சொல்லுகிறார். பாவம் செய்வதற்காக நரகத்தியில் போடுவது என்னும் தண்ட னையானது, மிகக்கொடுமையான சட்டம் என்றே நான் அபிப்பிராயப்படுகிறேன். இவ்வுலகில் நடத்தப்படும்

கொடுமையான இம்சைகளுக்கெல்லாம் மேலே சொன்ன கொள்கையே காரணமென்பது நிச்சயம் அதாவது, சுவிசேஷங்களில் சொல்லப்பட்டிருக்கிறபடி எடுத்துக்கொள்வோமேயானால் கிறிஸ்துவே இவ்விதக் கொடுமைகளுக்கெல்லாம் காரணர் என்பது விளங்கும்.

இதைப்போலவே இன்னும் பல சில்லரை விஷயங்கள் இருக்கின்றன. காடரீன் (Gadarene) பன்றிகளின் கதையை எடுத்துக்கொள்ளுங்கள். அவைகளுக்குள் பிசாசை நுழைத்து அவைகள் மலையுச்சியிலிருந்து சமுத்திரத்திற்குள் விழும்படியாகச் செய்தது, காருண்யச்செயலாகுமா? என்பதை யோசித்துப்பாருங்கள். சர்வசக்தியுடைய கிறிஸ்துவானவர் பிசாசுகளைத் தானாகவே விரட்டியடித்திருக்கலாம். அதை விட்டுவிட்டு பன்றிகளுக்குள்ளே போய்ப் புகுந்துகொள்ளும்படி செய்தாராம்! மற்றொரு வேடிக்கையான கதையொன்று எனக்கு அடிக்கடி ஆச்சரியத்தைக் கொடுப்பதுண்டு. அதுதான், அத்திமரத்தைப்பற்றிய கதையாகும். "கிறிஸ்துவுக்குப் பசியாயிருந்ததாம்; இலைகளோடு கூடிய அத்திமரம் ஒன்று தூரத்தில் தெரிந்ததாம்; அதில் தின்பதற்கு ஏதேனும் பழமிருக்குமென்று அதனருகில் போனாராம்; ஆனால் அதில் வெறும் இலைகளைத்தவிர வேறொன்றுமே இல்லையாம்; ஏனெனில் பழம் பழுக்கும் பருவகாலம் இன்னும் வரவில்லையாம். உடனே, ஏசு என்ன செய்தார் தெரியுமா? "உன்னுடைய பழத்தை ஒருவருமே இனிமேல் சாப்பிடாமல் போகக்கடவது" என்று சாபமிட்டார்......
......அருகிலிருந்த பேதுரு (Peter) சொன்னதாவது, "குருசிரேஷ்டரே! அதோபாருங்கள்; நீங்கள்சாபங்கொ

டுத்த அத்திமரம் பட்டுப்போய்விட்டது'' எவ்வளவு வேடிக்கையான கதை பார்த்தீர்களா? பழம் பழுக்கும் பருவகாலம் வராமலிருந்ததற்காக மரத்தின்மேல் கோபித்துக்கொள்வது நியாயமாகுமா? மேற்கூறியவைகளிலிருந்து, புத்தியிலாகட்டும், நற்குணத்திலாகட்டும், கிறிஸ்துவானவர், சரித்திரத்திற் சொல்லப்பட்ட சில மனிதர்களைவிட எந்த விதத்திலும் மேம்பட்டவர் என்று சொல்லுவதற்கு ஹேதுவேயில்லை யென்பதே எனது அபிப்பிராயமாகும். புத்தியிலும் நற்குணத்திலும் நான் புத்தரையும் (Buddha) சாக்ரட்டீஸையும் (Socrats) கிறிஸ்துவுக்கு மேம்பட்டவர்களென்றே சொல்வேன்.

மன ஆவேசமே காரணம்.

நான் ஏற்கனவே சொன்னதுபோல, ஒரு மதத்தைப் பின்பற்றுகிற மக்கள், ஏதேனும் ஆராய்சி செய்து பின்பற்றுகிறார்களா என்றால், இல்லவே இல்லை. ஏதோ ஒருவிதமான மனக்கிளர்ச்சி அல்லது ஆவேசத்தைக் கொண்டுதான் பின்பற்றுகிறார்கள் மதம் மக்களை நல்லவர்களாக ஆக்குகிறபடியால், அதை எதிர்ப்பதேநிரம்பத் தப்பு என்று அடிக்கடி சொல்லப்படுவதை நீங்கள் கேட்டிருக்கலாம். நானும்கூட கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் பார்த்தது கிடையாது. சாமுவேல் பட்லரால் (Samuel Butler) எழுதப்பட்ட ''எரிவோனுக்கு மறுயாத்திரை'' (Erewhon Revisited) என்ற புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கும் பரிகாசக்கதையைப் படித்திருப்பீர்கள். அந்தக்கதையின் சுருக்கமாவது:—எரிவோன் என்ற இடத்தில் ஹிக்ஸ் (Higgs) என்ற ஒருவன் இருக்கிறான். அவன் வெகு தூரத்திலுள்ள ஒரு கிராமத்திற்குப்போகிறான். அங்கே கொஞ்ச நாள் இருந்த பிறகு அங்கிருந்து

படியே திடீரென்று ஆகாயமார்க்கமாய் ஒரு புகைக்கூண்டில்(Balloon) புறப்பட்டுவிடுகிறான். மறுபடி இருபது வருஷம் கழித்து அதே ஊருக்கு வருகிறான். அங்கே ஒரு புதிய மதம் உண்டாயிருப்பதைப் பார்க்கிறான். அம்மதத்தின்படி அவனை "சூரிய குமாரன்" என்ற பெயரினால் ஜனங்கள் வணங்கிவருகிறதையும் காண்கிறான். ஏனெனில், இவன்மேல் உலகத்திற்குப் பறந்ததைப் பார்த்தார்களல்லவா? அதற்காக ஆகாயத்தில்ஏறின திருநாள் கொண்டாட ஒரு விருந்து நடைபெறுகிறது. ஹாங்கி, பாங்கி என்ற இரண்டு மேதாவிகள் ஹிக்ஸ் என்ற மனிதனைத் தாங்கள் பார்க்கவே இல்லையென்றும், இனியும் பார்க்கவேமுடியாதென்றும் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வதைக் கேட்கிறான் ஆனால், சூரிய குமாரனுடைய மதத்தில் இவ்விருவரும்தான் முக்கிய குருமார்களாய் விளங்குகிறார்கள். இதைப்பார்த்த ஹிக்ஸுக்கு அதிகக்கோபம் வந்துவிடுகிறது. அவர்களிடம் சென்று, "இங்கேநடக்கும் புரட்டுகளையெல்லாம் நான் ஜனங்களிடத்தில் சொல்லி நான்தான் ஹிக்ஸ் என்ற மனிதன் என்பதையும் நான் ஆகாயமார்க்கமாய்ப்போன விதத்தையும் சொல்லிவிடப் போகிறேன்;என்றுசொல்கிறான். அதற்கு அவ்விருவரும், "நீ அவ்விதம் செய்யக்கூடாது; ஏனென்றால், இந்தப் பிரதேசத்திலுள்ள ஒழுக்கங்களெல்லாம் இந்தக்கட்டுக் கதையைச் சுற்றியே கட்டப்பட்டிருக்கின்றன; நீ மேல் உலகத்திற்குச் செல்லவில்லையென்பதை ஜனங்கள் தெரிந்து கொண்டுவிட்டால், பிறகு எல்லோரும் கெட்டவர்களாக ஆகிவிடுவார்கள்; ஆகையால் சொல்லவேண்டாம்," என்று சொல்லுகிறார்கள். அவன் அதைக்கேட்டுக் கொண்டு பேசாமல் போய்விடுகிறான்.

இதேமாதிரிதான் கிறிஸ்து மதத்திலும், கிறிஸ்து மதம் இல்லாவிட்டால் நாமெல்லோரும் கெட்டவர்களாகிவிடுவோம் என்று சொல்லப்படுகிறது. ஆனால் கிறிஸ்து மதத்தில் சேர்ந்திருந்ததினாலேதான் பெரும்பாலான மக்கள் நிரம்பக் கெட்டவர்களாயிருந்திருக்கிறார்கள் என்பதேஎனது அபிப்பிராயமாகும். எந்தக்காலத்திலும், எவ்வளவுக் கெவ்வளவு மத உணர்ச்சி அதிகத்தீவிரமாகவும், மதத்தில் மக்களுடைய பிடிவாதமான நம்பிக்கை அதிகமாகவும் இருந்ததோ அவ்வளவுக் கவ்வளவு உலகில் கொடுமையும் அக்கிரமமும் நிறைந்திருந்தது என்ற சிறந்த உண்மையை எவரும் மறுக்கமுடியாது. நம்பிக்கை என்பதே நிறைந்திருந்து—கிறிஸ்து மதத்தை மக்கள் அப்படியே நம்பியிருந்த அந்தக்காலத்தில்தான் இங்க்விஸிஷன் (Inquisition) என்ற மதக்கொடுமைகளும் சித்திரவதைகளும் நடைபெற்றன. நிரபராதியான லட்சக்கணக்கான பெண்கள் துஷ்டதேவதைகள் என்று சொல்லி தீயிலிட்டுக் கொளுத்தப்பட்டார்கள். மதத்தின் பெயரால் மக்களை இதைப்போன்ற இன்னும் எவ்வளவோ கொடுமைகளுக்குள்ளாக்கினார்கள்.

இவ்வுலகத்தின் நிகழ்ச்சிகளை உற்று நோக்குங்கள். மனித சமூகத்தில், இரக்கமான உணர்ச்சியை உண்டாக்கும் ஒருசிறு முயற்சியிலும் சரி; குற்றம் சம்மந்தமான சட்டத்தைச் சீர்திருத்தும் ஒவ்வொரு முயற்சியிலும் சரி; சண்டைகளைக் குறைக்கும் எந்தச்சிறிய முயற்சியிலும் சரி; வெள்ளைநிறமல்லாத மற்ற மக்களை நன்றாய் நடத்த வேண்டுமென்ற ஒவ்வொரு முயற்சியிலும் சரி; அடிமைத்தன்மையைஒழிக்கும் எந்த முயற்சியிலும்சரி, நீதியிலும் ஒழுங்கிலும், முன்னேறக்கூடிய ஒவ்வொரு சிறு

விஷயத்திலும், உலகிலுள்ள மதங்கள் என்று சொல்லப்படு பவைகளெல்லாம் இடைவிடாது எதிர்த்துக்கொண்டே வந்திருக்கின்றன என்பதை எவராலும் மறுக்கவே முடியாது. இப்போது நடைமுறையில் இருக்கும் கிறிஸ்து மதமானது. அந்தக்காலத்திலும்சரி, இப்பொழுதும் சரி, மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கே முக்கியமான பெரிய முட்டுக்கட்டையாயிருந்தது; இன்னமும் இருக்கிறது என்பதை அழுத்தந்திருத்தமாய்ச் சொல்லுவேன்.

மதங்கள் முன்னேற்றத்திற்கு எப்படி முட்டுக்கட்டையாயிருந்தன?

மனித சமூக முன்னேற்றத்திற்கு கிறிஸ்து மதமானது இன்னமும் முட்டுக்கட்டையாகத்தான் இருந்து வருகிறதென்று நான் சொல்லும்போது நான் மிகைப் படுத்திச்சொல்லுவதாக நீங்கள் நினைக்கலாம். ஆனால் நான் மிகைப்படுத்திக் கூறவில்லையென்றே நினைக்கிறேன். நான் சொல்லப்போகும் ஒரு விஷயத்திற்காக நீங்கள் ஆத்திரப்படாமலிருக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். அது ஒரு சந்தோஷமான விஷயமல்லவாயினும், அம்மாதிரி விஷயங்களைச் சொல்லித்தீரவேண்டிய நிர்ப்பந்தத்திலேயே கிறிஸ்து மதம் இருப்பதற்காக நான் வருந்துகிறேன் நாம் வசிக்கும் இவ்வுலகில் கிரந்திப்புண் நோயையுடைய ஒருவன் இருப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். ஒன்றுமறியாத ஒருசிறுபெண்ணை அவனுக்கு மணஞ்செய்து கொடுத்திருப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். இவ்விஷயத்தில் கத்தோலிக்கக் கிறிஸ்து மதம் சொல்வது என்ன தெரியுமா? “கல்யாணமென்பது கலைக்கமுடியாத

ஒரு தெய்வீக ஸம்ஸ்காரமாதலால் அந்தத்தம்பதிகள் இருவரும் ஆயுள்முழுதும் சேர்ந்தேயிருக்கவேண்டும், என்பதே கத்தோலிக்கக் கிறிஸ்து மதத்தின் கட்டளையாகும். கிரந்திப்புண்ணுடைய குழந்தைகளைப்பெற்றெடுக்காமல் தடுத்துக்கொள்வதற்காக அந்தப் பெண்ணனவள் எவ்விதமுயற்சியும் செய்யக்கூடாது என்பதே கத்தோலிக்க மதக்கட்டளை. இது கொடுமை! கொடுமை!! மகாகொடுமை!!! என்றே சொல்லுகிறேன். பிடிவாத குணமில்லாத எவரும், ஈவு இரக்கமுள்ள எந்த ஜீவனும், துன்பம் இன்னது என்ற உணர்ச்சியை அறியக்கூடிய எந்த அற்பமனிதனும் மேலே சொன்ன பாதகச்செயலைக் கண்டு மனங்கரையாமல் இருக்கவே மாட்டான் என்பது திண்ணம்.

மேலேசொன்னது ஒருசிறு உதாரணமேயாகும். கிறிஸ்து மதமானது ஒழுக்கம், நீதி என்ற பெயரினல் மனித சமூகத்திற்குள் அனுவசியமானதும் சற்றும் பொருந்தாததுமான துன்பங்களை நுழைத்துக் கொடுமைப்படுத்துகிறது என்பதற்கு இதைப்போன்ற எண்ணிறந்த உதாரணங்கள் கூறமுடியும். அதுமாத்திரமல்ல, துன்பத்தைக்குறைக்கக்கூடிய எல்லா முயற்சிகளுக்கும்-ஏன்? மனித சமூக முன்னேற்றத்தின் ஒவ்வொரு முயற்சிக்கும் கிறிஸ்து மதம் இன்றும் எதிரியாகவே இருந்துகொண்டிருக்கிறது. ஏனெனில், மனிதனுடைய சந்தோஷ வாழ்க்கைக்குச் சிறிதும் சம்மந்தமில்லாத ஏதோ சில குறுகிய நோக்கங்கொண்ட சட்டங்களைவைத்துக்கொண்டு, அவைகளே ஒழுக்கத்தை நிலைநாட்டக்கூடியவை என்று வாய்ப்பறைசாற்றிவருகின்றது. மனிதவாழ்க்கையைச்சந்தோஷப் படுத்தக்கூடியது என்று நீங்கள் ஏதாவது இரண்டொரு

விஷயங்களைச் சொல்வீர்களானல், மதக்காரர்கள் அதை அலட்சியமாகவே நினைத்துக்கொண்டிருக்கிருர்கள். "ஒழுக்கத்திற்கும் மனிதனுடைய சந்தோஷத்திற்கும் என்ன சம்மந்தம்? நீதிகளெல்லாம் மனிதனை சந்தோஷப்படுத்துவதற்காகவா இருக்கின்றன? இல்லவே இல்லை. அவர்களை மோட்சத்துக்கு லாயக்குள்ளவர்களாய் ஆக்குவதற்கல்லவா இருக்கின்றன;" என்று கிறிஸ்துவர்கள் சொல்லுகிருர்கள். ஆமாம்; மிகச்சரி; இந்த உலகத்திற்கு லாயக்குள்ளவர்களாய்ச் செய்வதற்காக மதக்கோட்பாடுகள் இல்லவே இல்லையென்பதை நானும் ஒப்புக்கொள்ளுகிறேன்.

மதத்திற்கு அஸ்திவாரம் பயமே.

பயம் என்ற அஸ்திவாரத்தின் மீதே மதம் என்பது கட்டப்பட்டிருக்கிறதென்பதே எனது அபிப்பிராயம். தெரியாத ஒன்றை நினைத்து அதற்காகப்பயப்படுவது ஒருகாரணம். நான் முதலில் கூறியதுபோல், நமக்கு ஒரு அண்ணன் இருக்கிருன், அவன் நம்முடைய சண்டைகளிலும் தொல்லைகளிலும் பக்கத்துணையாயிருப்பான் என்ற உணர்ச்சி மற்றொருகாரணம். சுருங்கக் கூறினல், எல்லாவற்றிற்கும் பயமே காரணமாகும். அதாவது, அற்புதமான ஒன்றை நினைத்துப் பயப்படுவதும், எடுத்த காரியத்தில் வெற்றிகிடைக்காது என்ற பயமும், கடைசியாக இறந்துபோவோமே என்ற பயமுமேயாகும். பயம் என்பதிலிருந்து பிறந்ததுதான் கொடுமை என்பதாகும். ஆகையால் கொடுமையும் மதமும் ஒன்றையொன்று பிணைத்துக்கொண்டிருப்பதில் எவ்வித ஆச்சரியமுமில்லை. ஏனெனில் இவ்விரண்டிற்கும் அடிப்படையாயிருப்பது

பயம் என்பதாகும். கிறிஸ்து மதம் இன்னும் இது போன்ற பல மதங்கள், பல பழையதத்துவங்கள் ஆகிய எல்லாம் சேர்ந்து எதிர்த்தும் படிப்படியாக முன்னேறிக் கொண்டுவந்து கடைசியாக வெற்றிபெற்று நிற்கும் விஞ்ஞானம் என்னும் முறையால் இவ்வுலக மக்களாகிய நாம் பல விஷயங்களைக் கொஞ்சங் கொஞ்சமாய் அறிய ஆரம்பித்திருப்பதோடு, அவைகளில் நிபுணர்களாகவும் கூட விளங்குவதற்குச் சௌகரியம் ஏற்பட்டுவிட்டது. பல்லாயிரக்கணக்கான வருஷங்களாக நமது மனிதசமூகம் அழுந்திக்கிடந்த கேவலமான பயத்தினின்றும் நம்மைக்காப்பாற்றுவதற்காக விஞ்ஞானம் என்பது வந்திருக்கிறது. கற்பிதமான ஆதரவுகளை எதிர்பார்த்துக்கொண்டு திரியாமலும், மேல் உலகத்தில்போய் எல்லோரும் ஒன்றுசேரலாம் என்ற கட்டுக்கதையில் நம்பி மோசம்போகாமலும், மதங்கள் இதுவரையில் செய்திருப்பதுபோல் இல்லாமல், இனிமேலாவது இவ்வுலகில் ஒழுங்காக வாழ்வதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்வதற்கு விஞ்ஞானம் என்பது வந்திருக்கிறது. நமது அறிவே இவ்விஷயத்தை நமக்கு விளக்கிக்காட்டும்.

நமது கடமை என்ன?

நாம் நமது காலிலேயே நிற்கவேண்டும். நமக்குச் சுற்றிலுமுள்ளவைகளைபொதுநோக்குடன் பார்க்கவேண்டும். உலகிலுள்ள நன்மைகள், தீமைகள்; அழகுகள், ஆபாசங்கள் ஆகியவைகளை அப்படி அப்படியே பார்க்கவேண்டும். உலகத்தைக்கண்டு பயப்படக்கூடாது. இதுவே நமது விருப்பமாகும். உலகில் தோன்றும் பயங்கரமான நிகழ்ச்சிகளைக் கண்டு நடுங்கி அவைகளுக்கு அடிமை

யாவதை விட்டு, அவைகளை நமது அறிவினால் வெல்லு வதற்கு முயற்சிக்க வேண்டும். கடவுள் என்ற கருத்து முழுதும் பண்டைக்காலத்து கீழ் தேசத்துக் கொடுங் கோன்மை அரசாங்கங்களிலிருந்து தோன்றியஎண்ணமே தவிர வேறில்லை. இந்த எண்ணமானது சுயேச்சையை விரும்பும் எந்த மனிதனுக்கும் லாயக்கில்லாததாகும். மாதா கோவிலுக்குள் நின்றுகொண்டு தாங்கள் தங்களையே மகாகொடிய பாவிகள் என்றும், இன்னும் இது போன்ற விஷயங்களையும்சொல்லிக் கொள்ளுவதைக் கேட்கும் போது, எவ்வளவு வெறுக்கத்தக்கதாய் இருக்கிறது என்பதை யோசித்துப்பாருங்கள் சுயமரியாதையுள்ள எந்த மனிதனாவது இவ்விதம் சொல்லிக்கொள்ளுவானா? நாம் இவ்வுலகில் தைரியமாக வாழவேண்டும். இருப்பதற்குள் எவ்வளவு நல்லவிஷயங்களைச் செய்துகொண்டு சந்தோஷமாய் வாழமுடியுமோ அவ்விதம் வாழவேண்டும். நாம் விரும்புகிறபடி இவ்வுலகம் அவ்வளவு நல்லதாக இல்லையானாலும், இது வரையில் இருந்ததைவிட இனிமேல் எப்படியும் கொஞ்சமாவது நல்லதாகத்தானிருக்கும் என்று நிச்சயமாய் உணரவேண்டும். நல்ல உலகமானால் அதில் அறிவு நிலவவேண்டும்; அன்பு திகழவேண்டும்; துணிவு செறிதல்வேண்டும். பழமையைப் பிடித்துத் தொங்கிக்கொண்டிருக்கும் இழிதன்மை ஒழியவேண்டும். அறிவற்ற மக்களால் பண்டைநாளில் எழுதிவைக்கப்பட்ட சொற்களுக்கு நமது சுயேச்சையான அறிவை அடிமைப் படுத்துகின்ற அறிவின்மை அழியவேண்டும். ஒரு நல்ல உலகத்திற்குத் தேவையானது பயமற்றமனப்பான்மையும் தாராளமான அறிவு முதிர்ச்சியுமேயாகும். மாண்டு மடி

ந்துபோன பழமையைப்பார்த்துப் பார்த்து கழுத்தொடி வதில் பயனில்லை. நம்முடைய அறிவின் சக்தியால்பழை மையைவிட எவ்வளவோ மேலான நிலைமைகளை இனிவரு ங்காலத்தில் உண்டாக்க முடியும் என்ற சந்தோஷமான தன்னம்பிக்கையோடு வீறுகொண்டு எழவேண்டும்.

குறிப்பு:

இந் நூலின் 2-ம் பக்கத்தை 6-ம் பக்கம் என்று திருத்தி வாசித்துக்கொள்வதோடு 2-ம் பக்கத்திலிருந்து 12-ம் பக்கம்வரை 6—7—8 என்று முறையே வாசித்துக்கொள்ளவும்.

முன்னேற்றத்திற்கு

மதம்

முட்டுக்கட்டை.

இந்நூல் லண்டன் பகுத்தறிவு நூற்பிரசுர சங்கத்தின் அமைச்சர் சார்லஸ் **T.** கோர்ஹாம் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு திருச்சி தோழர் **K. M.** பாலசுப்பிரமணியம் **B. A., B. L.** அவர்களால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞானவளர்ச்சியையும், எவ்வாறு மதமும் மதக்குருக்களும் கடிந்து, தடுத்து முட்டுக்கட்டையாயிருந்து வந்தார்கள் என்பதைச் சரித்திர பூர்வமாய் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது ஒவ்வொரு பகுத்தறிவு வாதியிடத்திலும் சமதர்ம வாதியிடத்திலும் அவசியம் இருக்கவேண்டிய அரிய நூல். 120 பக்கங்கள் கொண்ட அழகிய கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணு 5.

தனிப்பிரதி வேண்டுவோர் 6 அணு
ஸ்டாம்பு அனுப்பவும்.

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம்
லிமிட்டெட், ஈரோடு.

பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பின் நிலைமையையும், காதலின் புரட்டையும், விபசாரத்தின் தன்மையையும், கைம்மையின் கொடுமையையும், மறுமணத்தின் அவசியத்தையும், விவாகரத்தின் உரிமையையும், கர்ப்பத்தடையின் மேன்மையையும், சொத்துரிமையின் மாண்பையும், பெண்ணின் விடுதலையையும் மிகவிரிவாய் தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும். முகவுரையுடன் 100 பக்கங்கள் கொண்டது. அழகிய கிளேஸ் கடிதத்தில் கண்கவர் வனப்பினதாய் பைண்டு செய்யப்பட்டுள்ளது. இது நமது முதல் வெளியீடு.

இதன் விலை அணா 5.

தனிப்பிரதி வேண்டுவோர் 6-அணா

ஸ்டாம்பு அனுப்பவும்.

விலாசம்:

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம்,

லிமிடெட்., ஈரோடு.

You should also read-

JESUS: A MYTH—George Brandes—(S 2·00)

WHY I LEFT THE CHURCH?-Joseph McCabe
—(3 d)

BIBLE UNMASKED—Joseph Lewis—(S 1·15)

CHRISTIANITY AND CONDUCT—Hypatia
Bradlaugh Bonner—(6 d.)

THE FAILURE OF CHRISTIANITY— Charles
T. Gorham—(10 Cents)

OPEN LETTER TO JESUS CHRIST—D. M.
Bennett (10 Cents)

CHRISTIANITY AND MYTHOLOGY— Hon.
J. M. Robertson (S 3 00)

THE BIBLE—John E. Remsburg—(S 2·50)

BIBLE, A DANGEROUS MORAL GUIDE—
Marshall J. Gauvin—(20 Cents)

THE NEGLECTED BOOK OR THE BIBLE
UNVEILED—M. M. Mangasarian—(S 2·50)

HAS CHRISTIANITY MADE USEFUL
CONTRIBUTIONS TO CIVILIZATION?—
Hon. Bertrand Russell—(7 d)

PRIESTLY CELIBACY EXPOSED—Rev
Geo. Tounsend Fox—(25 Cents)

QUESTIONS FOR CATHOLICS—F. H.
Hayward—(2 Sh·6 d).

WATTS & CO., LIMITED,
Nos. 5, and 6, Johnson's Court,
Fleet St., London E. C. 4.